29th August 1970]

VI. DISCUSSION ON THE ANNUAL FINANCIAL STATEMENT FOR 1970-71 AND THE SUPPLEMENTARY FINANCIAL STATEMENT FOR 1969-70 OF THE TAMIL NADU ELECTRICITY BOARD.

MR. CHAIRMAN : Now the Hon. the Minister for Electricity will reply to the debate on the Tamil Nadu Electricity Board Budget.

மாண்புமிகு திரு. ஓ.பி. ராமன் : மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கைந்து நாட்களாக மின்சார வாரியத்தின் மீது நடந்த விவாதத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இரு தரப்பிலும் தங்களுடைய கட்சிக்கு ஆதரவான கருத்துகளையும், சிலர் நடுநிலைமையோடு பொதுவாக நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கருதிப் பல்வேறு கருத்துகளையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு விவாதத்திற்கு நான் பதிலளிக்கிறபோது எதிர்த் தரப்பிலிருந்து பேசுகின்றவர்கள் முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூன்று ஆண்டுக் காலத்திலே நல்ல சாதனைகளைச் செய்யவில்லை என்று சொன்னதற்காக ஒரு 10 ஆண்டுக்கால புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டினேன். இந்தத் தடவை அதை விடுத்து அகில இந்தியாவிலேயே தமிழகம் எந்த அளவிலே இருக்கிறது என்ற ஒரு கண்ணோட்டத்தை மட்டும் சுருக்கமாக நான் முதலில் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இன்றைக்குக் கிட்டத்தட்ட 11 லட்சம் பம்ப்செட்கள் அகில இந்தியாவிலும், மின்சாரத்தினால் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் நான்கு லட்சத்து எண்பதாயிரம்,– 71,000 என்று போட்டிருக்கிறது– இப்பொழுது இருக்கின்ற கணக்குப்படி 4,80,000 பம்ப்செட்கள் தமிழ் நாட்டிலே மட்டும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றால், இதை முதலிலே யோசித்துப் பார்க்க வேண்டும். அதைவிட இன்னும் தமிழ் நாட்டிலே எத்தனை ஊர்களுக்கு மின்சாரம் போட்டிருக்கின்றோம்? அகில இந்தியாவிலேயும் எல்லா மாநிலங்களிலேயும் எவ்வளவு தூரம் மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தால்கூட நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்ற கணக்கு தெரிய வரும். ஆகவே கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதாலும், பம்ப்செட்களுக்கு மின்சாரம் கொடுப்பதாலும் அகில இந்தியாவிலேயே யாரும் செய்ய முடியாத அளவுக்குத் தமிழ் நாடு செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நான் இன்னும் சொல்கிறேன், மின்சாரக் கட்டணம் அதிகமாகியிருக்கிறது, குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதில் எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். நமது மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் விவசாயக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று பேசுகிற இந்த நேரத்தில், தொழிலுக்கு இருக்கிற கட்டணத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். எங்களைப் பொறுத்த அளவில் இப்பேர்ப்பட்ட சூழ்நிலை ஏன் வந்தது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இடையிலே தற்காலிகமாக மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி அதன் மூலம் பல கோடி ரூபாய்களைப் பெற்று, அதன் மூலம் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் எங்களுக்குக் கிடையாது. நாம் வெளி நாடுகளிலிருந்து பல பொருட்களை வாங்க வேண்டுமென்றால் "ஃபாரின்

எக்ஸ்சேஞ்ச்'' முறைப்படி, இந்த வாரியத்தினுடைய கட்டண விகிதங்கள் ''வயபிள் யூனிட்டு''களாக இருக்க வேண்டும் என்று ''ஓர்ல்டு பாங்க்''கூட ஒரு ஆலோசனையைச் சொன்னார்கள். ''உங்களுடைய மின்சாரக் கட்டணம் விவசாயத்துக்குச் சரியாக இல்லை, சற்று உயர்த்துங்கள்,'' என்றார்கள். அதோடு நிறுத்தவில்லை. மத்திய அரசிலேயிருந்துகூட, ''12 பைசாவாக வைத்தால் தான் நன்றாக இருக்கும், எல்லோருக்கும் உதவி செய்ய நலமாக இருக்கும், ஆகவே உயர்த்துங்கள்'', என்றார்கள். ஏதோ உயர்த்தினோம். அதை அடுத்து ஏற்பட்ட சூழ்நிலைக்குப் பின்னாலே இப்பொழுது சற்றுக் குறைத்திருக்கின்றோம். அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அகில இந்தியாவிலேயும் விவசாயத்துக்கு நன்மை செய்கின்ற அளவிலே 9 கோடி ரூபாய் நஷ்டப்பட்டு மின்சாரம் கொடுக்கின்ற மாநிலம் தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலமும் இல்லை என்பதை அருள்கூர்ந்து உறுப்பினர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். விவசாயிகள் நன்மை பெற வேண்டும் என்பதற்காக எவ்வளவு கோடி நஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று கட்டணத்தைக் குறைத்து விவசாயிகள் உபயோகத்துக்குக் கொடுத்திருக்கின்றோம். இந்த ஆண்டு மட்டும் 60,000 பம்ப் செட்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம். நான் ஒவ்வொரு மாநிலத்தின் கணக்குகளையும் வரவழைத்துப் பார்த்தேன். ஏதாவது ஒரு மாநிலத்திலே நமது மாநிலத்தைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்களா என்றால், அப்படி யாரும் கொடுக்கவில்லை. அந்த அளவுக்குச் சீரோடும் சிறப்போடும் தமிழ் நாட்டு மின் வாரியம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று கருதுகிறேன்.

இன்னும் சில உறுப்பினர்கள் பேசுகிறபோது, தமிழ் நாட்டிலே எங்கே பார்த்தாலும் லைட்கள் எரிவதில்லை. பம்ப் செட்களுக்கு மின்சாரம் கிடைக்கக் கால தாமதம் ஆகிறது. 'அப்ளை' செய்து ஓராண்டு, இரண்டு ஆண்டு ஆனாலும் வரவில்லையென்று சொன்னார்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்த திரு. வெங்கா அவர்கள்கூடக் குறையாகச் சொன்னார்கள். நான் என்னைப் பொறுத்த அளவிலே சொல்வதெல்லாம், தமிழ் நாட்டிலே ஏறக்குறைய 10 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. இந்த 10 லட்சம் கிணறுகளில் ஏறத்தாழ $4\frac{3}{4}$ லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறோம் என்றால், ஒரு 3 ஆண்டுக் காலத்திலே எவ்வளவு முடியும் என்பதை மட்டும் பார்க்க வேண்டும். இன்றைக்கு ஆட்சி பீடத்திலே முதன்மை வகித்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்கள் 1972-க்குள் தமிழ் நாட்டிலே உள்ள எல்லா ஊர்களுக்கும் மின்சாரம் கொடுப்போம் என்று சொன்னதன் உள் நோக்கம் என்னவென்றால், ஆங்காங்கே வெளிச்சங்கள் போடப்படும். அடுத்த கட்டமாக இன்றைக்கு 60,000 பம்ப்செட்கள் என்று இருப்பது மாறி, $1\frac{1}{2}$ லட்சம், 2 லட்சம் பம்ப்செட்கள் போடுகிற சாத்தியக்கூறு இரண்டாண்டுகளுக்குப் பின்னாலே வரத்தான் போகிறது. இதையெல்லாம் உத்தேசித்து இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் விவசாயிகளுக்காக நல்ல பல சலுகைகளைச் செய்கிறது. இன்னும் அகில இந்தியாவிலேயும் மொத்த மின்சாரத்திலே 25 சதவீதம் விவசாயத்துக்காகப் பயன்படுத்துகிற மாநிலம் தமிழ்

நாட்டைத் தவிர வேறு இல்லவே இல்லை என்பதை நான் தெளிவாகக் கூற முடியும். அது மட்டுமல்ல. இந்தத் தொழிலாளர்களுக்குச் சமீபத்திலே சம்பள விகிதத்தை உயர்த்தினேம். கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் உயர்த்தப்பட்டது. எந்த மாநிலத்திலேயாவது இந்த 4 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்களா என்றால், ஒன்றும் சொல்ல முடியாது. கேரளத்திலே பார்த்தால் 2 கோடி சில்லறை. மைசூரிலே பார்த்தால் ஒரு கோடி சில்லறை. தமிழ் நாட்டிலேதான் 4 கோடி சில்லறை. இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம் என்றால், இன்றைக்கு இருக்கிற சர்க்கார் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு நன்மை பயக்கின்றது என்பதை இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு மட்டுமல்ல. நேற்று நண்பர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, எதோ இன்ஜினீயர்களைப் பழிவாங்கியிருக்கிறோம் என்றார்கள். நான் இன்னும் சொல்கிறேன். இன்ஜினீயர்கள் எவ்வளவு தவறு செய்திருந்தாலும் சரி, எந்த அளவுக்கு அரசு தீர்மானத்தை எடுத்திருக்கிறது என்றால், தமிழ் நாட்டு வரலாற்றிலேயே முதன்முதலாக ''லைட்னிங் ஸ்டிரைக்'' என்று சொல்லக்கூடியது இந்தத் தடவைதான் ஆரம்பமாயிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகள் முதன் முதலாக நமது தமிழ் நாட்டு வரலாற்றிலேயே இப்போதுதான் ஸ்டிரைக் செய்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் சொல்லப் போனால், 5-10 p.m.
"It is strictly prohibited by law". அப்பேர்ப்பட்ட செயல்களைச் செய்தவர்களானாலும், அங்கே இருக்கிற பியூஸ்களைப் பிடுங்குவது, நிலையத்தை நிறுத்தி விடுவது, இப்படிப்பட்ட தீய செயல்களைச் செய்திருந்தாலும் கூட, இன்றைக்கு ஆட்சி பீடத்திலே உள்ள தலைவர் அவர்கள் கருணை வைத்து எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள், அவர்கள் மீது கேஸ் போட வேண்டாம், அவைகளை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். இவ்வளவும் தெரிந்த பிறகும்கூட, நண்பர் திரு. ஈஸ்வரமூர்த்தி போன்றவர்கள் மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள் என்று சொன்னால், அதற்கு என்ன பொருள் இருக்கிறது என்பதை என்னாலே கண்டுபிடிக்க முடியவில்லை.

அது மட்டுமல்ல. இப்போது கணக்காயர்கள், காசுக்காரர்கள் ஆகியவர்களுக்கு அதிகமான வேலைப் பளு என்று சொல்கிறார்கள். ஒரு காலத்தில் இவர்களுக்கு அதிகமான வேலைப் பளு இருந்தது. ஆனால் இப்போது குறைத்து விட்டார்கள். சிக்கனம் வேண்டும், செலவு அதிகமாகிறது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். 1965-லே இந்தியா பாகிஸ்தான் யுத்த காலத்திலே வேலைப் பளு 25 சதவீதம் அதிகப்படுத்தப்பட்டது. அதை இன்றைக்குக் கொஞ்சம் குறைத்தோம். எனவே வேலைப் பளுவை அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்ற குற்றச்சாட்டிலே அவ்வளவு பொருள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது பொருத்தமானது அல்ல. வேலை இல்லை என்று சொல்கிறார்கள். படித்தவர்களுக்கு வேலை இல்லை, வேலை இல்லாத் திண்டாட்டம் என்று சொல்கிறார்கள். படித்த பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கிற அளவிலும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் அளவிலும் இன்றைக்கு 1500 பில் கலெக்டர்களை

மின்சார வாரியம் எடுத்துக் கொள்கிற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்தியா முழுவதும் பல்லாயிரக் கணக்கான படித்த இன்ஜினீயர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். சென்ற ஆண்டு 600 இன்ஜினீயர் களுக்கு வேலை கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு 200 இன்ஜினீயர் களுக்கு வேலை கொடுக்க இருக்கிறோம். படித்தவர்களானாலும், படிக்கா தவர்களானாலும், அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கிற நிலைமை களை இந்த அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. வேலை வாய்ப்புகளை ஆராய்ந்து வேலையில்லாத் திண்டாட் டத்தைக் குறைக்கிற முறையிலே செய்து வருகிறோம். இதை இந்த நேரத்திலே இந்த அவையிலே சொல்ல ஆசைப்படுகிறேன். நமது மதிப்பிற்குரிய திரு. தாமோதரன் அவர்கள் கூறுகிறபோது, தொழிற் சாலைகளுக்குக் கட்டணத்தைக் குறைத்துச் சலுகை காட்ட வேண்டும் என்றார்கள். அவர் சிறிது பொறுத்திருந்தால், நாங்கள் எவ்வளவு சலுகை கொடுத்திருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இது பற்றிய ஒரு அறிக்கையைக் கொடுக்க இருக்கிறோம். அதுபற்றி அவருக்குத் தெரிந்திருக்காது என்று கருதுகிறேன். கட்டணத்தில் 10 சதவீதம் குறைத்திருக்கிறோம். நேற்றைய தினம் மதிப்பிற்குரிய திரு. ஆறுமுகசாமி அவர்கள் பேசுகிறபோது விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மால்கோ தொழிற் சாலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகையை ரத்துச் செய்ய வேண்டு மென்று கூறினார்கள். இதை யோசித்துப் பார்க்க வேண்டும். கேரளத் தில்கூட பேப்பர் மில்லுக்கும், மற்றத் தொழிற்சாலைகளுக்கும் சலுகை அளித்திருக்கிறார்கள். பேப்பர் மில்லுக்கு ஒரு டன்னுக்கு ஒரு ரூபாய் என்று வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். தொழிலைப் பெருக்க வேண்டும் என்று கேரளத்திலே தொழிலாளர் சர்க்கார் இதைச் செய்து வருவது பொருத்தமானதாகும். அதே மாதிரி இங்கேயும் தொழிற்சாலைகளுக்கு ஆக்கம் தருகிற முறையிலே இயன்ற அளவிலே நாம் செய்து கொண் டிருக்கிறோம். வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தொழிற்சாலைகளுக்கு இந்தக் கட்டணச் சலுகை தரப்படுகிறது. மக்க ளுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமானால், அதற்கு ஒரு சீரான திட்டம் வகுத்தாக வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கடைசியில் 450 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். இப்பொழுது பக்கத்து மாநிலங்களிலிருந்து இதைப் பெற்றுக் கொண் டிருக்கிறோம். மைசூரிலிருந்தும், கேரளத்திலிருந்தும் இதைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நமக்கு மின்சாரம் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்? அங்கே தொழிற் சாலைகளை ஆரம்பித்து அங்கேயுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புக்கு வழி செய்கிற நேரத்திலே நமக்கு மின்சாரம் கொடுக்க மாட்டேன் என்று சொன்னால், ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த நிலையில் நமது தொழில் முன்னேற்றம் தடைப்படக் கூடும். ஆகையால் தான் அனல் மின்சாரத்தை 600 மெகவாட்டாக உயர்த்த வேண்டும், அணு மின்சாரத்தில் இரண்டாவது பகுதியை ஆரம்பிக்க வேண்டும், நெய் வேலியில் 2-வது சுரங்கத் திட்டத்தை ஆரம்பித்து, அதன் மூலம் 600 மெகவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். கிட்டத்தட்ட 140 மெகவாட் மின்சாரம்

அதிலிருந்து கிடைத்தால் தான், தமிழ் நாட்டிலே 10 ஆண்டுகளிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். அந்த அளவில் ஒரு சீரான திட்டத்தை உருவாக்க உடனடியாக நமது முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை விரைவு படுத்த அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்று ''லைன் லாஸ்''. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய மாநிலத்தின் ''லைன் லாஸ்'' என்பது மிகக் குறைவு. அதற்குச் சில விவரங்களை வைத்திருக்கிறேன். நாம் இன்றைக்கு உபயோகப்படுத்தும் கம்பிகளின் நீளம் ''லோ டென்ஷன், ஹை டென்ஷன்'' என்று பிரிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களிலே இப்படிப் போட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஆந்திரப் பிரதேசத்தில் ''லைன் லாஸ்'' 26.57 சதவீதம், கேரளத்திலே 20 சதவீதம், மைசூரிலே 16 சதவீதம், ராஜஸ்தானிலே 25 சதவீதம், உத்திரப் பிரதேசத்திலே 19 சதவீதம், தமிழ் நாட்டிலே 17 சதவீதம். நமது மாநிலத்திலே தான் மிகக் குறைவு. பல்வேறு லைன் லாஸ்களையும் சீர் செய்வதென்றால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கு வழி செய்ய வேண்டும். இப்பொழுது இருக்கிற ''சப்-ஸ்டேஷன்கள்'' போதாது. கம்பிகளின் நீளத்தை மாற்ற வேண்டும். இதற்கு என்று டெக்னிகல் கணக்கு வைத்திருக்கிறார்கள். அதைச் சீராக வைத்துக்கொள்ள முடியவில்லை. அதற்கு ஒரு சீரான திட்டம் தயார் செய்து 10 ஆண்டுகளிலே அதைச் செயல்படுத்தினால், இந்த ''லைன் லாஸ்'' இருக்காது. 900 சதுர கிலோ மீட்டருக்கு ஒரு ''சப்-ஸ்டேஷன்'' என்று ஏற்படுத்த வேண்டும். இப்படி மாற்றியமைத்தால்தான் 'லைன் லாசைத்' தவிர்க்க முடியும். நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் 24 மணிக்கு ஒரு தடவை ''கரண்ட் பெயிலூர்'' இல்லாமல் இல்லை, வேறு நாடுகளில் இப்படி ''கரண்ட் பெயிலூர்'' இல்லை என்றார்கள். இது ''டெக்னிகல் பால்ட்'' அல்ல. இதற்குச் சரியான திட்டம் வைத்துக்கொள்ளவில்லை. இவற்றைச் சீர் செய்வதென்றால், ரூ. 450 கோடியிலே ஒரு திட்டம் தயார் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் ''கரண்ட் பெயிலூர்'' இல்லாமல் செய்ய முடியும். எதிர்க்கட்சி நண்பர்கள் பேசும்போது, முன்னேற்றக் கழகத்தைச் சேராதவர்களுக்கு நன்மை செய்வதில்லை என்றார்கள். அந்த நோக்கத்தோடு வாரியம் செயல்படுவதில்லை என்ற உறுதியை அளிக்க விரும்புகிறேன்.

அடுத்து, எருக்கஞ்சேரி விவகாரத்தைப்பற்றிச் சொன்னார்கள். சென்ற ஆண்டே இதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். சென்ற ஆண்டு அதைப்பற்றிப் பேசவில்லை. மாறாக இந்த ஆண்டு பேசியிருக்கிறார்கள். அதற்கு முதலிலே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு முன்னால் ''விஜிலன்ஸ்'' பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த ரிப்போர்ட்டிலே பல்வேறு விஷயங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். விஜிலன்ஸ் அறிக்கைகள் மூன்று அறிக்கைகள்தான். சுதந்திரம் பெற்று 23 ஆண்டுகளிலே வந்திருக்கின்றன. 1965-ல் ஒன்று, 1967-ல் ஒன்று, 1969-ல் ஒன்று. இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தவுடன் ஏற்பட்டுவிட்ட தவறு

அல்ல. முதல் அறிக்கையிலே இரண்டு குற்றங்களைப் போட்டிருக்கிறார்கள். இரண்டாவது அறிக்கையிலே 7 குற்றங்கள், மூன்றாவது அறிக்கையிலே 19 குற்றங்களைப் போட்டிருக்கிறார்கள். இதைக் கண்டு பிடிப்பது என்பது அவ்வளவு எளிதானதல்ல. என்னைப் பொறுத்த வரையிலே, விஜிலன்ஸ் கமிஷனரும் போலீஸ் நிர்வாகத்தினரும் மிகத் திறமையாகச் செயலாற்றியிருக்கின்றனர். எவ்வளவோ தவறுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதை நல்ல முறையிலே ஆராய்ந்து, யோசித்துப் பார்க்க வேண்டும். இன்னும் ஆடிட் கணக்கிலே சில தவறுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவைபற்றி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி மூலம் பரிசீலனை நடத்தப்பட்டிருக்கிறது. எருக்கஞ்சேரி விவகாரம்பற்றி சட்ட மன்றத்திலே பேசப்பட்டது. ''பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி''யிலே எழுதி விசாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலேதான் சர்க்கார் நடவடிக்கை எடுக்கிற முறை வந்தது. 2, 3 குற்றச் சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

" The Accountant-General has also not said that it is a shortage. It is a question of suspense balance awaiting clearance and not physical shortage"

இப்படிச் சொல்லியிருக்கிறார். இதை பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கு அனுப்பினோம். அதிலே ஏதாவது குற்றமிருந்தால், வந்தது வரட்டும், யாராலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. எருக்கஞ்சேரி விவகாரத்திலே 8 அதிகாரிகள் சம்பந்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. அதிலே இரண்டு பேர் வாரியத்தின் பெரிய அதிகாரிகள். திரு. முத்தையா அவர்களுக்கு அதிலே சம்பந்தமில்லை என்று வந்தது. அரசு மீண்டும் பரிசீலித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அனுப்பியது. அதற்குப் பின்னாலே சில பேர்கள் மேலே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளில் ''பிரைமா பேசி கேஸ்'' இல்லை என்று விட்டு விடப்பட்டது. ஆனால், வீரமணி, குழந்தை, வைத்தியநாதன், பரமசிவம், நாராயணன், குப்புச்சாமி, ஜான் போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி 1968-69-ல் ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே 1969-ல் புதிதாக ஒரு கமிட்டி போட்டு திரு. சிவலிங்கம், உணவு இலாகா காரியதரிசி திரு. ஹரிபாஸ்கர் இவர்களைப் போட்டு ஒரு விசாரணை நடந்து அது அறிக்கை கொடுக்கும் தருவாயில் இருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு, என்ன தண்டனை கொடுக்கலாம் என்பதை அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கும். இதற்கு இடையிலே இந்தக் குற்றத்திலே ஈடுபட்டிருந்த ரெவினியூ இலாகா தாசில்தார் இறந்துவிட்டார். அதற்குப் பின்னாலே மின்சார வாரியத்தைச் சேர்ந்த ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இறந்து விட்டார். அதனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ரெவினியூ இலாகாவிலே உள்ள இன்னொருவர் அதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று விசாரணை செய்து அவர் செய்தது தவறு இல்லை, அவர்களுக்கு மேலே இருக்கிறவர்கள் செய்தது என்றாலும் இவருக்கும் தண்டனை உண்டு என்கிற முறையிலே அவருக்கு இரண்டு இன்கிரிமென்ட் நிறுத்தி உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதுதான் எருக்கஞ்சேரி விவகாரம். இன்னும் இரண்டொரு மாதங்களில் முழு விவரமும் தரப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

29th August 1970] [திரு. ஓ. பி. ராமன்]

இந்த நேரத்திலே மின்சார வாரியம் பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அதிக அளவு மின்சாரத்தை தயார் செய்வதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறது. இவைகளெல்லாம் சிறப்பாக நடந்தேறினல், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் அதிக அளவு மின்சாரத்தை இந்த வாரியம் வழங்க வழி வகைகள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனல் எங்கு பார்த்தாலும் மின்சாரம் அதிகமாகப் போடுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லாத காரணம் ''மெட்டீரியல்ஸ்'' இல்லை, பொருள்கள் இல்லை என்று நாம் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இது விஷயமாக, மாண்புமிகு முதல் அமைச்சரும், தொழில் அமைச்சரும் பல கடிதங்களை மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனல், 1972-ஆம் ஆண்டுக்குள்ளே எல்லா ஊருக்கும் மின்சாரம் போடுவோம் என்று அறிவித்திருக்கும் மாநிலம் இந்தியாவிலேயே ஏதாவது ஒன்று இருக்குமானல், அது இந்தத் தமிழ் நாடுதான். காந்திஜியின் கிராம முன்னேற்றத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய மாநிலம் இந்தத் தமிழ் நாடுதான். அப்பேர்ப்பட்ட மாநிலத்திற்கு இரும்பு உருக்கைக் கொஞ்சம் அதிகம் கொடுக்க வேண்டுமென்று கேட்கும்பொழுது, எல்லா மாநிலங்களுக்கும் ஒரே சீராகத் தான் கொடுப்போம் என்று மத்திய சர்க்கார் சொல்லுகிறது. இன்னும் இரண்டு ஆண்டுக்குள்ளே தமிழ் நாட்டிலேயுள்ள எல்லா ஊருக்கும் மின்சாரம் போட வேண்டுமென்று நாமிருக்கும் பொழுது, $1\frac{1}{2}$ லட்சம் பம்ப் செட்டுக்கு மின்சாரம் தர வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிறார்கள்; இந்த ஆண்டுக்குள் 40,000 பம்ப் செட்டுக்குத் தான் மின் இணைப்பு கொடுக்கப்படவிருக்கிறது. விவசாயிகள் ஒவ்வொரு பம்ப்செட்டுக்கும் 3,000 ரூபாய் செலவு செய்துவிட்டு எங்களுக்கு மின்சாரம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இப்படி இருக்கும்பொழுது பொருள்கள் இல்லை, இரும்பு இல்லை, மத்திய சர்க்கார்தான் கொடுக்க வேண்டும், கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவேதான், இந்த மாமன்றத்தின் மூலமாக மாண்புமிகு முதல்வர் சார்பாக காந்திஜியின் கிராம முன்னேற்றத் திட்டத்தை முதன் முதலாக அகில இந்தியாவிலேயே தமிழ் நாட்டிலே நிறைவேற்றுகின்ற காரணத்தினல், இந்தத் தமிழ் நாட்டுக்கு இரும்பு உருக்கை அதிகமான அளவுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தொழிலை நன்றாகத் தெரிந்து கொண்டவர்கள் ; மின் வாரிய தொழிலாளர்கள் அடிக்கடி சலுகை வேண்டுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இதன் விஷயமாகத் துணைக் குழு போட்டிருப்பது தெரியும். அவர்களுக்குக் கொடுத்திருக்கும் நிவாரணங்கள் போதாது என்பதை நாங்களே கூட உணருகிறோம்; தொழில் அமைச்சர் கூட சொல்லியிருக்கிறார், அதையெல்லாம் பரிசீலனை செய்து ஆவன செய்கிறோம் என்று. எனவே, துணைக் குழுவின் அறிக்கை வந்ததும், அதற்கெல்லாம் சரியான ஒரு நிவாரணத்தைச் செய்ய முடியும் என்று இங்கே உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன். 2, 3 தினங்களாக இந்த அவையிலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் நல்ல பல கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். போன ஆண்டிலே அப்படிச்

5-20 p.m.

சொல்லப்பட்ட கருத்துக்களின் பேரில் நல்ல ஒரு நடவடிக்கையை எடுத்துள்ளோம் என்பதை உறுப்பினர்கள் அறிக்கையிலிருந்து பார்த்திருக்கலாம். இந்த ஆண்டும் அவ்வாறே உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் பேரிலே நல்ல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வோம் என்ற உறுதி மொழியைக் கூறி, அப்படிப்பட்ட கருத்துக்களை வைத்த எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றியைக் கூறி, நான் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : முதலிலே மாண்புமிகு அமைச்சரிடமிருந்து ஒரு விளக்கத்தை நான் அறிய விரும்புகிறேன். இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு இப்பொழுதுள்ள மின்சார உற்பத்தியை வைத்து நம்முடைய மாநிலத்தின் தேவைகளைச் சமாளிக்க முடியாது. ஆகவே தான் அணு மின் சக்தியை மேலும் 200 மெகவாட் அதிகமாக உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம். அதோடு நெய்வேலியிலே மற்றொரு சுரங்கம் வெட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இரண்டும் மத்திய அரசாங்கத்தின் உதவியினால் நடக்க வேண்டியதுதான். ஆனால், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் என்பது நாமே ஆரம்பிக்க வேண்டியதுதானே. அதையாவது இந்த அரசாங்கம் உடனடியாக ஆரம்பித்து தமிழகத்திலே ஏற்படவிருக்கும் நெருக்கடிகளைத் தவிர்க்க வேண்டும். எப்படியும் நமக்கு மின்சாரத் தட்டுப்பாட்டினால் தொழிற் துறையிலேயும், விவசாயத் துறையிலேயும் நெருக்கடிகள் ஏற்படும். அந்த நிலைமை இன்னும் 2, 3 ஆண்டுக்குள் எப்படியும் வந்துவிடும். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் அடுத்த வருஷமாவது தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தை ஆரம்பிப்பதற்கு நம் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அமைச்சரிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது, மின்சாரத்தை விவசாயத்திற்கு குறைந்த செலவில் கொடுக்கிறார்கள், அதற்கு வேண்டிய வரியை எல்லாம் இந்த அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது, அதையெல்லாம் வாரியத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். யூனிட்டு ஒன்றுக்குக் கட்டணம் 9 பைசா இப்பொழுது வாங்கிக்கொண்டிருக்கிறோம். நான் விளக்கத்திற்காகச் சொல்லுகிறேன், மைசூர், கேரளா போன்ற மாநிலங்கள் ஹைட்ரோ பவர் என்று சொல்லுகின்ற, தண்ணீரிலேயிருந்து மின் உற்பத்தி செய்வதிலே முந்தியிருக்கிறார்கள். நாம் நிலக்கரி, அணு போன்றவைகளை வைத்து மின் உற்பத்தி செய்கிறோம். ஹைட்ரோ பவர் என்பது 2, 3 பைசா ஒரு யூனிட்டுக்கு ஆகும். அதுவே, ''டிஸ்ட்டிரிபூஷன்'' நிலையிலே வரும்பொழுது, ஒரு யூனிட்டுக்கு 6 அல்லது 7 பைசா என்று வரலாம். அவர்கள் குறைந்த செலவிலே மின் சக்தியை உற்பத்தி செய்கிறார்கள். ஆயினும் மைசூர் மாநிலத்திலே ஒரு யூனிட்டுக்கு 10 பைசா வாங்குகிறார்கள் ; கேரள மாநிலத்திலே 9.9 பைசா வாங்குகிறார்கள். அப்படிக் கொடுப்பதற்குக் காரணம் வியாபாரங்களுக்குக் கெடுதல் செய்ய வேண்டாமென்பதுதான். நான் ஒரு விவசாயிதான். இங்கே 5 வேலி நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயி

5,000 ரூபாய் செலவு செய்து கிணற்றை வெட்டி, ஒரு 2,500 ரூபாய் செலவு பண்ணி பம்ப்செட்டுப் போட்டால், அவன் மின்சாரக் கட்டணம் கட்டுவது கஷ்டமாக இருக்கிறது என்கிறுன். 5, 6 இலட்சம் கிணறுகளைத் தோண்டிவிட்டு பம்ப் செட்டுகளைப் போட வேண்டுமென்றால், பொருள்கள் இருக்காதே ? வாரியம் என்ன செய்வது ? அதுவும் இங்கே பேசிய உறுப்பினர்களிடம் ஒன்றை நான் எதிர் பார்த்தேன்; இவ்வளவு முற்போக்கான காரியங்களை விவசாயத்திற்கும், தொழிலுக்கும் செய்ய வேண்டுமானால், எந்த வகையிலே இந்த மின் வரியை உயர்த்துவது என்பதற்குப் பல யோசனைகளைக் கூறுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், யாருமே அப்படிச் சொல்லவில்லை. அது எல்லாம் இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலையில் தமிழ் நாடு அரசு மின் சக்தியைப் பெருக்கி, நல்லதைத் தன்னால் ஆன மட்டும் மக்களுக்குச் செய்யும் என்ற உறுதியைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : நான் தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தை நிறைவேற்றுவதுபற்றிக் கேட்டேன்; அதற்கு அமைச்சர் அவர்களுடைய பதில் என்ன என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அது தான் நல்லதை எல்லாம் செய்வோம் என்று சொன்னேனே. எது, எது மக்களுக்கு நல்லதோ அதையெல்லாம் செய்யும் இந்த அரசு என்று சொல்லிக்கொள்கிறேன்.

VII. DISCUSSION ON THE FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1970-71

MR. CHAIRMAN : We will take up the discussion on the First Supplementary Statement of Expenditure for 1970-71.

திரு. எம். எத்திராஜுலு : மாண்புமிகு உதவி சேர்மன் அவர்களே, இன்று இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மன்றத்திலே துணை மானியக் கோரிக்கை 1,94,00,000 ரூபாய்க்குக் கேட்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த நேரத்தில் துணை மானியக் கோரிக்கை என்றால், அவசரக் காரியங்களுக்காக ஏற்படுகின்ற செலவுகளை சர்க்காரே செய்துவிட்டு பின்னர் அதைச் சட்ட மன்றத்திற்குக் கொண்டுவந்து, அதை நிறைவேற்றுவது என்பதாகும். இது ஒரு சம்பிரதாயம். இருப்பினும் கூட இதற்கு முன்னதாக 10 கோடி, 20 கோடி என்று துணை மானியக் கோரிக்கை வருவதைவிட, இப்பொழுது குறைந்த அளவிலே இருக்கிறது. இன்னும் இதைவிடக் குறைந்த அளவில், தவிர்க்க முடியாத காரியங்களுக்குச் செலவு செய்துவிட்டு, இந்தத் துணை மானியக் கோரிக்கையைக் கொண்டு வந்தால், நல்லது என்று இந்த அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக, பல அலுவல்களைக் கவனிக்கக் கூடிய துணைப் பதிவாளர்கள், அவர்கள் வேலையின் நிமித்தமாக, வேலைகளைத் திறம்பட கவனிப்பதற்காக, எட்டு ஜீப்புகள் வாங்குவதற்காக ரூபாய் 1,97,700 இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கேட்டிருக்கிறார்கள். ஏராளமான ஜீப்புகள் தமிழக அரசிடம் இருக்கின்றன ; எல்லா டிபார்ட்